<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 17.11.2025    அ.வ.எண்.  169/2019, வா.சா.1. சுதர்சன், த/பெ.ரமேஷ்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு 2017 ம் ஆண்டு 2 ம் பிரதிவாதி அவரது பவர் ஏஜெண்ட்டான 1ம் பிரதிவாதி மூலம் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 99/2017 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதி அவரது பவர் ஏஜெண்ட்டாக வழக்கு நடத்துவதாக கூறினார் என்றால் சரிதான்.அதன் பின்னிட்டு மேற்படி பவர் ஏஜெண்ட் குறித்து நான் பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்தேன் என்றால் சரிதான். பொதுவாக பதிவாளர் அலுவலகத்தில் பவர் ஏஜெண்ட்டுக்கான ஆவணத்தை எழுதி கொடுத்தவரோ அல்லது பவர் ஏஜெண்ட் மட்டும் தான் நகல் எடுக்க முடியும் என்றால் ஆவண எழுத்தர் எனது அசல் பத்திரத்தை கேட்டதின் பேரில் நான் கொடுத்ததால் பவர் பத்திரத்தை என்னிடம் எடுத்துக் கொடுத்தார்.

2) வா சா ஆ 2ல் வழக்கு தாக்கல் செய்யவும், வழக்கு நடத்தவும் பவர் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பவர் ஏஜெண்ட்டாக 1 ம் பிரதிவாதி வழக்கு நடத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கே பவர் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்பது தான் என்றால் சரிதான்.  கோவை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 99/2017 வழக்கில் பவர் ஏஜெண்ட் வழக்கு நடத்தக்கூடாது என்று மனு ஏதேனும் போட்டேனா என்றால் ஞாபகமில்லை. அ.வ.எண்.99/2017 ல் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரமும் தாவா சொத்து விவரமும் ஒன்று என்றால் சரிதான்.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

3) அ.வ.எண்.99/2017 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு பிரதிவாதி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால்சரிதான். மேல்முறையீட்டிலும் 2 ம் பிரதிவாதி அவரது பவர் ஏஜெண்ட்டான 1ம் பிரதிவாதி மூலம் வழக்கு நடத்திவருகிறார் என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமாகிவிட்டார் நானும் எனது அம்மாவும் தான் வாரிசு என்றால் சரிதான். Arbitration Award 2 நிபந்தனைகளுக்கு மேல் இருந்ததால் தான் நான் உரிமையாளர் என்று கோரமுடியாது என்றால் சரியல்ல.

4) தாவா சொத்தில் எனது தாத்தா நடராஜனுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. இதே சொத்தில் ஒரு பகுதி சொத்திற்காக பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 44/2015 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா எனது பேரில் ஜீவனாம்சத்திற்காக பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ,எண். 274/2017 வழக்கு தொடர்ந்து மாதம் ரூ.25000 ஜீவனாம்சமாக நான் கொடுக்க வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான் அதன்பேரில் நான் கோவை 5 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு எண்.45/2020 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் ரூ. 5,00,000 செலுத்தி இடைக்கால உத்தரவு கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5) அ.வ,எண். 274/2017 வழக்கில் சொத்துகளின் ஒரு பகுதி சொத்தான ரமேஷ் லாட்ஜ் இடத்தின் மீது பற்றுகை கேட்டுள்ளார் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தின்அடிப்படையில் ஏற்கனவேவழக்கு தாக்கல் செய்து வழக்குகள் நிலுவையில் இருக்கும் சமயத்தில் பொது அதிகார பத்திரம் செல்லாது என இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதான

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

பரிகாரமே ஏற்கத்தக்கதல்ல என்பதால் மற்ற பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/−(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.